
பகுதி I A
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக

(01) ஒருவரின் வருடவருமானத்தில் முதல் ரூ.500 000 வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அடுத்த ரூ.500 000 இற்கு 4% வரி அறவிடப்படுகின்றது. ரூ.650 000 வருட வருமாணமாகப் பெறும் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரியைக் காண்க.


(02) சுருக்கி எழுதுக. $\frac{3}{x}+\frac{1}{2x}$

(03) நிழற்றிய பகுதியை தொடைக்குறிப்பீட்டில் தருக.




(04) மடக்கை வடிவில் எழுதுக. $x = a^b$

(05) உருவில் தரப்பட்ட தரவுகளுக்கேற்ப a யின் பருமனைக் காண்க.



(06) தீர்க்குக. $\frac{P}{3}-1=\frac{4}{5}$

(07) O ஐ மையமாகவுடைய வட்டத்தில் x, y இன் பருமன்களை காண்க



(08) மோட்டார் வாகனம் ஒன்று $3\frac{1}{2}$ மணி நேரத்தில் 175km தூரம் செல்கிறது. அதன் சாராசரிக் கதியை காண்க?

www.lkedu.lk

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்



LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945



Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945



அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்


Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

(09) $6x^2, 4xy^2$ என்பதன் பொதுமடங்குகளில் சிறியதைக் காண்க.

(10) தரப்பட்ட உருவில் $AB = DC$ ஆகும்.
$\Delta ABC, \Delta BCD$ ஆகியன ப.கோ.ப எனும் நிபந்தனையில் ஒருங்கிசைவதற்கு சமமாக இருக்க வேண்டிய கோணச் சோடி யாது?




(11) அடியின் விட்டம் $14cm$ ஆகவுள்ள செவ்வட்ட உருளை செவ்வட்ட உருளை ஒன்றின் உயரம் $15cm$ ஆகும். இதன் வளைபரப்பளவைக் காண்க. (r ஆரையும் h உயரமும் உடைய உருளையின் வளைந்த பரப்பின் அளவு $2\pi rh$ ஆகும்.)

(12) தரப்பட்ட உருவில் $ABCD, BEFC$ இரு இணைகரங்களாகும். வழங்கப்பட்ட தரவுகளுக்கேற்ப

(i) AD யின் நீளம் யாது?

(ii) $A\hat{D}B$ யின் பருமன் யாது?



(13) பின்வரும் கூற்றுக்களில் தொடர் மாறியைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) மாதமொன்றிலுள்ள நாட்களில் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் நிறை.


(ii) கிராமமொன்றிலுள்ள குடும்பங்களில் உள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை.

(iii) மாணவர் குழு ஒன்று கணிதப்பாடத்தில் பெற்ற புள்ளிகள்.

(14)எழுமாற்றுப் பரீசோதனை ஒன்றில் A, B என்பன தம்முள் புறநீங்கும் நிகழ்ச்சிகளாகும். $P(A) = \frac{1}{3}, P(B) = \frac{3}{4}$ $P(A \cap B) = \frac{1}{4}$ஆயின் $P(A \cup B)$ ஐக் காண்க.

www.lkedu.lk


(15)தரப்பட்ட அரியத்தின் கனவளவைக் காண்க.



(16) (0,5) , (3,8) எனும் புள்ளிகளினூடு செல்லும் நேர் கோட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு ஆகியவற்றைக் காண்க.


(17) $\sqrt{34}$இன் முதலாம் அண்ணளவாக்கத்தைக் காண்க

(18) தரப்பட்ட உருவில் $B\hat{A}C = 60°$, $A\hat{C}D = 130°$ ஆகும் $A\hat{B}C$ இன் பருமனைக் காண்க.



(19) காரணி காண்க. $x^2 - x - 42$


(20) தரப்பட்ட வட்டத்தின் விட்டம் AB யாகும். $B\hat{A}C = 50°$ ஆகவும் $AB = AD$ ஆகவும் இருப்பின் $A\hat{D}C$ இன் பருமனைக் காண்க




www.lkedu.lk

(21) 10 வீரர்களுக்கு 6 நாட்களுக்கு போதுமான உணவு முகாமொன்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக இரு வீரர்கள் முகாமில் இணைந்து கொண்டால் சேமித்த உணவு எத்தனை நாட்களுக்கு போதுமானதாகும்.

(22) இணைகரம் $ABCD$ யின் பரப்பளவு $75cm^2$ ஆகும் ΔABC யின் பரப்பளவைக் காண்க




(23) தரப்பட்ட ஆரைச்சிறையின் சுற்றளவு $50cm$ ஆகவும், PQ வில்லின் நீளம் $22cm$ ஆகவும் காணப்பட்டால் இதன் ஆரையின் அளவு யாது?



(24) $4 - 5x > 19$ என்னும் சமனிலியைத் தீர்க்க

(25) தரப்பட்ட உருவில் $AB = 8cm$ ஆகும். A, B யிலிருந்து சமதூரத்தில் AC யில் அமையத்தக்க புள்ளி D யைக் காண்பதற்குரிய அமைப்பு கோடுகளை பருமட்டாக வரைக.



www.lkedu.lk

பகுதி I B
எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக

(01)முற்றாக நிரப்பப்பட்ட தாங்கி ஒன்றிலிருந்த நீரில் $\frac{2}{5}$ பங்கு வீண்விரயமானது. மிகுதியின் $\frac{5}{6}$ பங்கு பாவனைக்கு எடுக்கப்பட்டது.

(i) வீண்விரயமான பின் எஞ்சியுள்ள நீரின் பின்னம் யாது?


(ii) பாவனைக்கு எடுத்துக்கொண்ட நீரை முழுவதின் பின்னமாக எழுதுக?

பாவனைக்கு எடுத்த பின் எஞ்சிய நீரானது சமமான கொள்ளளவுடைய மூன்று பாத்திரங்களில் நிரப்பப்பட்டது.

(iii) பாத்திரங்களில் நிரப்பப்பட்ட நீரானது முழுவதின் என்ன பின்னம்?

(iv) பாத்திரம் ஒன்றின் கொள்ளளவு 25 l ஆயின் தாங்கியின் கொள்ளளவு யாது?

(02)யன்னல் ஒன்றின் பருமட்டான உரு அளவுகளுடன் தரப்பட்டுள்ளது.
உருவானது அரைவட்டம் ஒன்றும் சதுரங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்ட விதத்தை காட்டுகின்றது.



(i) பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?

(ii) அரைவட்டத்தின் பரப்பளவு யாது?

(iii) அரைவட்ட வில்லில் உள்ள கம்பியின் நீளம் யாது?

(iv) யன்னலை உருவாக்குவதற்கு தேவையான மொத்தக் கம்பியின் நீளம் யாது?

www.lkedu.lk

(03)(a)பாடசாலை கட்டம் ஒன்றிற்கு நீந்தை பூசுவதற்கு 6 மனிதர்களுக்கு 8 நாட்கள் எடுக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. முதல் 4 நாட்களும் 4 மனிதர்கள் மட்டும் வேலைக்கு சமுகமளித்தனர்.

(*i*) மொத்த வேலைக்கு செலவாகும் மனித நாட்களின் எண்ணிக்கை யாது?


(*ii*) முதல் 4 நாட்களும் முடிக்கப்பட்ட வேலையின் அளவு முழுவதின் என்ன பின்னம்?

(*iii*) எஞ்சிய வேலையை எதிர்பார்த்த நாட்களுக்குள் முடிப்பதற்கு தேவையான மேலதிகமான மனிதர்கள் எத்தனை?

(*iv*) மனிதன் ஒருவனின் நாட்கூலி ரூ. 2000 ஆயின் மொத்த கூலியாக இவ்வேலைக்குச் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

(b)தனது எல்லைக்குள் உள்ள கடைகளுக்கு குறித்த நகரசபையானது வருடாந்த மதிப்பிட்ட தொகையின் 8% ஐ வரியாக அறவிடுகிறது. கடையொன்று காலாண்டு வரியாக ரூ. 2400 செலுத்தினால் அதன் வருடாந்த மதிப்பிட்ட தொகையைக் காண்க.

(04)செயலமர்வுக்கு வருகை தந்த 180 பேருக்கு தேவையான மதிய உணவு பொதிகள் பற்றிய விபரத்தை பூரணப்படுத்தப்படாத நிரல் வரைபு ஒன்றும், வட்ட வரைபு வரைவதற்கான அட்டவனை ஒன்றும் கீழே தரப்பட்டுள்ளது.



உணவுப் பொதிகளின் வகை	எண்ணிக்கை	ஆரைச்சிறைக் கோணம்
மீன்	40	$360° \times \frac{40}{180} = 80°$
இறைச்சி	50	$360° \times \frac{50}{180} =$ ___
முட்டை	60	$360° \times \frac{60}{180} =$ ___
மரக்கறி	_____	$360° \times \frac{___}{180} =$ ___
	180	


(*i*) மரக்கறி உணவுப் பொதி தேவையானோரின் எண்ணிக்கையை அட்டவனையில் நிரப்பி நிரல் வரைபில் காட்டுக.

(*ii*) வட்ட வரைபை வரைவதற்காக அட்டவனையைப் பூர்த்தி செய்க.

(*iii*) தரப்பட்ட வட்டத்தில் வட்ட வரைபை வரைக.

www.ikedu.lk


(iv) மீன், முட்டை விரும்புவோரின் எண்ணிக்கையை விகிதமாக எழுதி எளிய வடிவில் தருக.



(05)(a)விளையாட்டு ஒன்றிற்காக இரு சில்லுகள் ஒரே சமயத்தில் சுழல விடப்படுகின்றன. சில்லு ஒன்று நிறங்களாலும் மற்றது இலக்கங்களினாலும் குறிக்கப்பட்டுள்ளது.



(i) இரு சில்லுகளும் சுழல விடப்படும் போது பெறப்படும் மாதிரி வெளியை தரப்பட்ட நெய்பரில் குறித்துக்காட்டுக




(ii) பச்சை நிறத்துடன் இரட்டை எண் பெறப்படும் நிகழ்தகவு யாது?

(iii) எந்த ஒரு நிறத்துடனாதல் ஒற்றை எண் பெறப்படும் நிகழ்தகவு யாது?

(b)*A, B* என்னும் இரு மாணவர்கள் செய்முறைப்பரீட்சை ஒன்றை எதிர் நோக்குகின்றனர்.
A சித்தி பெறும் நிகழ்தகவு $\frac{1}{3}$ ஆகவும் *B* சித்தி பெறும் நிகழ்தகவு $\frac{3}{4}$ ஆகவும் உள்ளது என ஆசிரியர் கூறுகிறார். இங்கு *P, F* என்பன **P**- சித்தியடைதல் , **F**- சித்தியடையாமைகுறிக்கின்றது.

(i) மேலே தரப்பட்ட தரவுகளை உபயோகித்து மரவரியை பூரணப்படுத்துக



(ii) *A* சித்திபெறும் அதே வேளை *B* சித்தியடையாமைக்கான நிகழ்தகவை காண்க?

www.ikeda.lk

All Rights Reserved முழுப் பதிப்புரிமையுடையது සියලු ම හිමිකම්ඇවිරිණි

மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education – Western Province

வருட அவசான ஆய்வுப்பரீட்சை
ஆண்டிறுதி மதிப்பீடு - 2018
Year End Evaluation

ஒழுங்கு தரம் Grade	10	விஷயப்பரப்பு Subject	கணிதம்	பத்திரம் Paper	II	காலம் Time	3 மணித்தியாலயம்

முக்கியம்

பகுதி A யிலிருந்து **5** வினாக்களையும் பகுதி B யிலிருந்து **5** வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் **10** வினாக்களுக்க விடை எழுதுக.

ஒவ்வொரு வினாவிற்கும் **10** புள்ளிகள் வழங்கப்படும்.

r ஆரையும் h உயரமுமுடைய செவ்வட்ட உருளை ஒன்றின் வளைந்த மேற்பரப்பு $2\pi rh$ உம் கனவளவு $\pi r^2 h$ உம் ஆகும்.

பகுதி A

எவையேனும்ஐந்துவினாக்களுக்கு விடையளிக்குக.

(01) $y = 2(x^2 - 2)$எனும் சார்பின் வரைபை வரைவதற்கு பூரணமற்ற அட்டவனை ஒன்று தரப்பட்டுள்ளது.

x	-3	-2	-1	0	1	2	3
y	14	4	-2	_	-2	4	14

(i) $x = 0$ஆக உள்ள போது yஇன் பெறுமானம் யாது?

(ii) x-அச்சு வழியே10 சிறிய பிரிவுகளை ஓர் அலகாகவும் y-அச்சு வழியே10 சிறிய பிரிவுகளை இரு அலகாகவும் வகைகுறிக்கப்படுமாறு உள்ள அளவீட்டை பயன்படுத்தி ஒரு வரைபுத் தாளில் மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.

வரைபைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.

(iii) சார்பின் இழிவுப் பெறுமானத்தை காண்க.

(iv) $y = 0$ஆகும் போது சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

(v) சார்பு நேராக அதிகரிக்கும்x இன் பெறுமான வீச்சை எழுதுக.

(vi) வரைபானது y அச்சின் வழியே மேல் நோக்கி இரு அலகுகள் நகர்த்தப்படுமாயின் அதன் சமன்பாட்டை $y = a(x^2 - b)$எனும் வடிவில் தருக.

(02)ரூ.25 000 பணத்தை 10% வருடாந்த வட்டி அறவிடும் நிதி நிறுவனம் ஒன்றில் கடனாகப் பெற்ற சாந்தன் மூன்று வருடங்களில் அதனை தீர்ப்பதாக உறுதியளித்ததுடன் இப்பணத்தை மாதாந்தம் 2% வழங்கும் பிறிதொரு நிதி நிறுவனத்தில் வைப்பிலிடுகின்றார். நிதி நிறுவனத்திலிருந்து மூன்று வருடங்களின் பின் பெற்றுக் கொள்ளும் மொத்தப்பணமானது கடனைத் தீர்ப்பதற்கு போதுமானது எனக் காட்டுக.

(03)(a)$x = \sqrt{\frac{y-b}{a}}$எனும் சூத்திரத்தில் y ஐ எழுவாயாக மாற்றுக

(b)பணிஸ் ஒன்றின் விலை வாழைப்பழம் இரண்டின் விலையிலும் ரூ 5 அதிகமாகும். 3 பணிசுகளும் 2 வாழைப்பழங்களினதும் மொத்த விலை ரூ 95 ஆகும்.

(i) பணிஸ் ஒன்றின் விலையை x எனவும் வாழைப்பழம் ஒன்றின் விலையை y எனவும் கொண்டு மேற்படி தரவுகளை உபயோகித்தும் ஒருங்கமை சமன்பாடுகளை அமைக்க.

(ii) அதனை தீர்ப்பதன் மூலம் பணிஸ் ஒன்றினதும், வாழைப்பழம் ஒன்றினதும் விலைகளை தனித்தனியே காண்க

www.saantror.com
www.ikeau.lk



Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk


இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

(04)(a)சுருக்கி எழுதுக. $(x+2)^2-3(x-2)$

(b)இணைகரம் $ABCD$ இல் D யிலிருந்து AB யிற்கு வரைந்த செங்குத்து DE ஆகும். DE யின் நீளமானது AB யின் நீளத்தை விட $3cm$ குறைவானதாகவும் $ABCD$ யின் பரப்பளவு $40cm^2$ ஆகவும் உள்ளது. AB யின் நீளத்தை $x\,cm$ எனக் கொண்டு இருபடிச் சமன்பாடு ஒன்று அமைப்பதன் மூலம் AB யின் நீளத்தைக் காண்க.



(05)மாத மொன்றில் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் அளவை பின்வரும் மீடிறன் அட்டவனை காட்டுகிறது.

அரிசியின் அளவு (kg)	0 - 5	5 - 10	10 - 15	15 - 20	20 - 25	25 - 30	30 -35
நாட்களின் எண்ணிக்கை (f)	2	3	5	8	6	4	2

(i) பரம்பலின் ஆகாரவகுப்பு யாது?

(ii) ஆகாரவகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு நாளொன்றில் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் இடைநிறையைக் காண்க.

(iii)அடுத்து வரும் மாதங்களிலும் இவ்விதமாக விற்பனை தொடரும் என எதிர் பார்த்தால் டிசம்பர் மாதம் விற்பனைக்காக களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய அசிரியின் மொத்தநிறையைக் காண்க.

(06)(a)$15m$ உயரமான AB என்னும் நிலைக்குத்து கோபுரம் ஒன்றின் அடி A யிலிருந்து நோக்கும் போது மரமொன்றின் உச்சியின் ஏற்றக்கோணம் $45°$ ஆகக் காணப்படுகின்றது. கோபுரத்தின் உச்சி B இலிருந்து மரத்தின் உச்சியின் ஏற்றக்கோணம்$30°$ஆகக் காணப்பட்டது.

(i) மேற்படி தரவுகளைக் காட்டும் $1cm$ இனால் $5m$ ஐக் குறிக்கும் அளவிடைப்படம் ஒன்று வரைக.

(ii) நீர்வரைந்த அளவிடைப்படத்தை உபயோகித்து மரத்தின் உண்மை உயரத்தைக் காண்க.

(b) சதுரமுகி வடிவ நீர்த்தாங்கி ஒன்றின் ஒரு பக்க நீளம் $1.5m$ ஆகும். இதனை நிரப்புவதற்கு நிமிடத்திற்கு $12l$ என்னும் வீதத்தில் நீர் பாய்ச்சும் குழாய் ஒன்று பயன்படுத்தப்படுகிறது.

(i) தாங்கியின் கொள்ளளவைக் காண்க.

(ii) தாங்கி முற்றாக நிரம்ப எடுக்கும் நேரம் யாது?

பகுதி B

எவையேனும்ஐந்துவினாக்களுக்கு விடையளிக்குக.

(07)(a)கூட்டல் விருத்தி ஒன்றின் $n^{ம்}$ உறுப்பு $T_n = 7-3n$

(i) விருத்தியின் முதல் நான்கு உறுப்புக்களையும் எழுதுக.

(ii) இதன் பொதுவித்தியாசம் யாது?

(iii) (-29) என்பது எத்தனையாம் உறுப்பு?

(iv) முதல் 12 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க?

(b)மேற் கூறிய கூட்டல் விருத்தியின் $3^{ம்}$ உறுப்பிலிருந்து தொடங்கியும் அதன் பொது வித்தியாசத்தைக் கொண்டதுமான பிறிதொரு விருத்தியின் $8^{ம்}$ உறுப்பைக் காண்க.

www.ikedu.lk

(08)பின்வரும் அமைப்புகளுக்கு cm/mm அளவிடை உள்ள நேர் விளிம்பு, கவராயம் ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்துக. அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டுக.

(i) $AB = 5\,cm$, $A\hat{B}C = 60^\circ$ ஆகவுள்ள சாய் சதுரம்$ABCD$ ஐ அமைக்க


(ii) மூலைவிட்டம் BDஐ வரைந்து அதற்கு சமாந்தரமாக Cயினூடு கோடு வரைக. நீட்டிய ABயும் நீர் வரைந்த சமாந்தர கோடும் சந்திக்கும் புள்ளியை E எனக் குறிக்க.

(iii) BEஇன் செங்குத்து இருகூறாக்கியை வரைக.

(iv) $C\hat{B}E$ இன் கோண இருகூறாக்கியை வரைக.

(v) நீர் வரைந்த $(iii), (iv)$ அமைப்புகள் சந்திக்கும் புள்ளி O என்பதை மையமாகவும் OB ஐ ஆரையாகவும் கொண்ட வட்டம் வரைக.

(09)தரப்பட்ட வட்டத்தில் A, B, C, D என்னும் புள்ளிகள் $AD = AB$ ஆகுமாறு அமைந்துள்ளன. BC ஆனது $DC = EC$ ஆகுமாறு E வரை நீட்டப்பட்டுள்ளது. $AC // DE$ எனக் காரணங்களுடன் நிறுவுக.



(10)(a)இணைகரம் ஒன்றின் பண்புகள் இரண்டு எழுதுக.

(b)$ABCD$ என்னும் இணைகரத்தின் மூலைவிட்டம் AC யின் நடுப்புள்ளி O ஆகும். AB யிற்கு சமாந்தரமாக O வரையப்பட்ட கோடு AD ஐ X இலும் BC ஐ Y இலும் சந்திக்கின்றது.


(i) உருவை வரைந்து தரவுகளை குறிக்க.

(ii)$\Delta AOX, \Delta COY$ என்பன ஒருங்கிசைவன என நிறுவுக.

(iii) நாற்பக்கல் $AYCX$ ஓர் இணைகரம் எனக் காட்டுக.

(11)(a)r ஆரையுடைய உருளை வடிவப் பாத்திரம் ஒன்றின் அரைப்பங்கு நீரால் நிரப்பப்பட்டுள்ளது. சீரான குறுக்கு வெட்டு முகத்தின் பரப்பளவு x ஆகவும் உயரம் a ஆகவுமுடைய திண்ம அரியம் ஒன்று பாத்திரத்தினுள் இடப்படுகிறது நீர் மட்டத்தின் உயரம் h இனால் அதிகரிக்குமாயின் $x = \pi ah$ எனக் காட்டுக.

(b)$\pi = 3.14, a = 2.5\,cm, h = 2\,cm$ ஆயின் மடக்கை அட்டவணையை உபயோகித்து x இன் பெறுமதி காண்க.



www.lkedu.lk

(12)(a)$n(P) = 40$, $n(Q) = 35$, $n(P \cup Q) = 60$ ஆகவும் இருப்பின் தொடைச் சூத்திரத்தை பயன்படுத்தியோ வேறு முறையாவோ $n(P \cap Q)$ ஐக் காண்க.

(b)விருந்து ஒன்றில் பங்குபற்றிய 50 பிள்ளைகளில் 28 பேர் ஐஸ்கிறீமையும் 15 பேர் பழங்களையும் சாப்பிட்டனர். பழங்கள் சாப்பிட்ட 15 பேரும் ஐஸ்கிறீமும் சாப்பிட்டனர்

(i) மேலே உள்ள தரவுகளை வென்னுரு ஒன்றில் குறிக்க.

(ii) எத்தனை பேர் ஐஸ்கிறீம் மட்டும் சாப்பிட்டனர்?

(iii)ஐஸ்கிறீம் சாப்பிடாத அனைவரும் புடிங் சாப்பிட்டனர் எனின் புடிங் சாப்பிட்ட பிள்ளைகள் எத்தனை பேர்?

(iv) பழங்களைச் சாப்பிட்டவர்களை A யினாலும் ஐஸ்கிறீம் சாப்பிட்டவர்களைB யினாலும் குறித்தால் ஐஸ்கிறீம் மட்டும் சாப்பிட்டவர்களை தொடைக் குறிப்பீட்டில் எழுதுக.

***

www.lkedu.lk